# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (21.03.2015 முதல் 25.03.2015)

**அறிக்கை எண் 22/2015** **தேதி: 20.03.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 17°செ முதல் 26°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 05°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (21.03.2015 முதல் 25.03.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 76 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 44 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 5 கி.மீ முதல் 7 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 21.03.15 | 0 | 35 | 23 | 5 | 72 | 42 | 7 | கிழக்கு |
| 22.03.15 | 0 | 35 | 23 | 4 | 74 | 40 | 5 | தென் கிழக்கு |
| 23.03.15 | 0 | 36 | 24 | 5 | 75 | 41 | 5 | தென் மேற்கு |
| 24.03.15 | 0 | 36 | 24 | 4 | 76 | 44 | 6 | தென் மேற்கு |
| 25.03.15 | 0 | 36 | 24 | 5 | 75 | 43 | 7 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மேகமூட்டம் அதிகமாக காணப்படுவதால் பயிர்களுக்கு உரங்களை நிலத்திடாமல் இலை வழியாக கொடுப்பது சிறந்தது. குறிப்பாக யூரியா அல்லது பொட்டாஷ் உரத்தை 1 சதவீத அளவில் இலை வழியாக தெளிக்கலாம்.
- ✓ வறண்ட வானிலையே காணப்படுவதால் எல்லா இறவை பயிர்களுக்கும் தண்ணீர் பாய்ச்சவும்.
- ✓ நெல் அரவையின் போது அரிசி உடையாமல் இருக்க வேகவைத்த நெல்லை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் வெய்யிலில் காய வைக்கவும்.
- ✓ வாழையில் இலை தின்னும் புழுக்கள் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி வீதம் கலந்து தெளிக்கவும்.
- ✓ வெப்பநிலை உயர்ந்து வருவதால் கால்நடைகள் மற்றும் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்புள்ளது. இதற்கு சுத்தமான போதிய அளவு தண்ணீர் கொடுப்பதுடன் கூரைகளின் மேல் நீரை தெளித்தோ அல்லது ஓரங்களில் நனைந்த சாக்குகளை தொங்க வைத்து இதை குறைக்கலாம்.

**குறுஞ்செய்தி**

- ✓ வாழையில் இலை தின்னும் புழுக்கள் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி வீதம் கலந்து தெளிக்கவும்.


**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**